**மாகாண கல்வித் திணைக்களம் சபரகமுவ - வாராந்த பாடசாலை**

**பாடம்: தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்** **தரம்: 09**

**வாரம்: டிசம்பர் 3ம் வாரம்**

- இக்கால கட்டத்தில் அனைத்து பாடங்களிலும் மீட்டல் செயற்பாடுகளில மேற்கொள்வதினூடாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவது உமது பொறுப்பாகும்.
- கீழ்வரும் பயிற்சிகளை செய்வதற்காக பாடப்புத்தகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியலும் சமூகமும் என்ற பாடத்தில் 83 தொடக்கம் 89ஆம் பக்கத்தினை நன்கு வாசித்து பயிற்சிகளில் ஈடுபடவும்.
- இச் செயற்பாட்டிற்காக ஒரு வார காலம் உங்களுக்கு வழங்கப்படும்.
- உங்களின் விடைகள் மற்றும் செயற்பாடுகளை **டிசம்பர் 3வது வாரம் - ICT உங்களின் பெயர் மற்றும் தரம்** என்பவற்றை குறிப்பிட்டு கோப்பாக செய்து வைக்கவும்.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியலினால் சமூகரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

01. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்துடன் தொடர்புபட்ட துறைகள் எவை? அத்துறைகளினால் கிடைக்கும் சேவைகள் எவையென பட்டியற்படுத்துக.

02. தற்காலத்தில் கொவிட் - 19 நோய்க் காரணியால் சுகாதாரத்துறை பெரிதும் அவதானத்துக்கு உட்பட்டுள்ளது. சுகாதாரத்துறையானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தினை பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்களை பட்டியற்படுத்துக.

03. தற்காலத்தில் கொவிட் - 19 நோய்க் காரணியால் உலகின் எல்லா நாடுகளிலும் கல்வி நடவடிக்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எனினும் நிகழ்நிலையினூடாக கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் கிடைக்கும் நன்மை தீமைகளை பட்டியற்படுத்துக.

04. உங்கள் வீடு மற்றும் வீட்டுச் சுற்றுப்புறச் சூழலில் காணக்கூடிய இலத்திரனியல் கழிவுகளை அட்டவணைப்படுத்துக.

05. இலத்திரனியல் கழிவுகளை அகற்றும் போது அதனை பெற்றுக்கொள்ளக்கூடிய இலங்கையிலுள்ள நிறுவனங்கள் தொடர்பாக இணையத்தில் இல்லது பெரியோர்களிடம் கேட்டறிந்து பட்டியலொன்றை தயாரிக்குக.

06. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் கணினி தொடர்பான வேலைவாய்ப்புகளை (பத்திரிகை, இணையம் சஞ்சிகை மற்றும் பெரியோர்களிடம் கேட்டறிந்து) முன்வைக்குக.